# றிடோ ஏரிகள் நகர்ப்பகுதி

www.twprideaulakes.on.ca



றிடோ ஏரிகள் நகர்ப்பகுதி (township) பல சிறப்புகளைப் பெற்றுள்ளது. இதன் எதிர்கால வாய்ப்புகள் இங்கு வாழும் பல்லினத்தவர்கள், பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் புவியியல் அமைப்பு ஆகியவற்றில் தங்கியுள்ளன. விவசாயம், சுற்றுலாத் துறை, மற்றும் சேவைக் கைத்தொழில்கள் இதன் உள் ஊர்ப் பொருளாதாரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. இயற்கைக்காட்சிகள் நிறைந்த ஏரிகள் பல இருப்பது இச்சமூகத்தின் கவர்ச்சிக்கு மிகச்சிறந்த காரணங்களில் ஒன்றாக இருக்கிறது. இப் பிராந்தியத்தில் றிடோ நீர்மார்க்கம் தவிர 500 கிலோமீற்றர்கள் (310 மைல்கள்) நீளமான நீர்க்கரையோரம் இருக்கின்றது. நீர்முன்னரங்கு அபிவிருத்தி இங்கு நடைபெறும் நிர்மாண வேலைகளில் பெரும்பாலானவற்றுக்குக் காரணமாக உள்ளது. 2010 ஆம் ஆண்டு ஆரம்பப்பகுதியில், இங்கு இரண்டு இடங்களில் சூரியசக்திப் பண்ணை ஆரம்பிக்கும் கருத்திட்டங்களுக்கான ஸ்தல விண்ணப்பங்களுக்கு நகராட்சி அனுமதி வழங்கியது.

இந்த றிடோ ஏரிகள் பகுதியினுள் வாழும் ஒவ்வொரு சமூகமும் எதுவாயினும் ஒன்றை வழங்கக் கூடியதாக உள்ளது. பெரிய றிடோ ஏரிக்கான புகுவழியாகப் போர்ட்லண்ட் (Portland) உள்ளது. நியூபொரோ (Newboro) தூண்டில் மீன்பிடிப்பவர்களுக்கான ஒரு புகலிடமாகக் கருதப்படுகிறது. உள்ளூர் வாசிகளும் இங்கு வருகை தருபவர்களும் இந்தப் பிராந்தியத்தில் மிக அமைதியான அமைவிடங்களில் ஒன்றாக இருந்து, நீரில் செல்லும் இனிமையான அனுபவத்தை சப்பெய்ஸ் லொக்ஸ் (Chaffeys Locks) தருவதாக் கூறுகின்றனர். 1810 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பழைய கல் ஆலை (Old Stone Mill) கனடாவின் தேசிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக டெல்ராவில் (Delta) அமைந்துள்ளது. இங்கு எல்ஜின் (Elgin) என்ற இடம் கடைவியாபாரத்திற்கான நகர மையநிலையமாகக் கருதப்படுகின்றது. சான்ட்ரி (Chantry), குரொஸ்பி (Crosby), போர்பார் (Forfar), லொம்பார்டி (Lombardy), மோர்ட்டன் (Morton), பிலம் ஹோலோ (Plum Hollow) மற்றும் பிலிப்ஸ்வில் (Philipsville) அடங்கலாக எமது சிறு கிராமங்களினதும் குக்கிராமங்களினதும் கிராமியக் கவர்ச்சித்தன்மை இந்த சமூகத்தின் மற்றுமொரு அனுகூலமாகும்.

மொத்தச் சனத்தொகை: 10,326 (Statistics Canada Census 2016)
ஜனவரி மாதச் சராசரி வெப்பநிலை: -8 °C (27 °F)
யூலை மாதச் சராசரி வெப்பநிலை: 26 °C (70 °F)
வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி: 784 mm மழை, 198 cm பனி
தனியொருவர் வருமானம்: $82,725
சராசரி வீட்டு வருமானம்: $95,437
சராசரித் தொழிலின்மை வீதம்: 5-6 %
உயர் பாடசாலைக் கல்வி பெற்ற வயதுவந்தவர்கள்: 2,640
கல்லூரி அல்லது பல்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்ற வயதுவந்தவர்கள்: 5,015
2 படுக்கை அறைகள் அடங்கிய அடுக்குமாடி வதிவிடத்தின் சராசரி மாதாந்த வாடகைச் செலவு: $794
சராசரி 3 படுக்கையறை விலகியிருப்பதாக மாளிகை: $325,163




**மேலதிகத் தகவல்கள்:**
Michael Dwyer, பிரதான நிருவாக உத்தியோகத்தர்
றிடோ ஏரிகள் நகர்ப்பகுதி
1439 County Road 8, Delta, Ontario K0E 1G0 Canada
613-928-2251 / info@twprideaulakes.on.ca

where lifestyle grows good business
www.leedsgrenville.com

Leeds & Grenville IMMIGRATION PARTNERSHIP
www.NewcomersInfo.ca